## நகர்மன்ற சாதாரணக் கூட்டப்பொருள்

2018ம் ஆண்டு ஜனவரி மாதம் 31.01.2018ம் தேதி புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள சாதாரணக் கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண் 1

நகராட்சி ஆணையர் அவர்களது டிசம்பர் 2017 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 240** **நாள் 31.01.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 2

நகராட்சி பொறியாளர் அவர்களது டிசம்பர் 2017 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 241** **நாள் 31.01.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 3

இந்நகராட்சியில் சங்கிலியாளாக பணிபுரிந்து வரும் திரு.சி.முத்தையா தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் உடல் நிலை குறித்து வாரம் இரண்டு நாள்கள் டயாலிசிஸ் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி செல்ல வேண்டும் என்பதால் புதுக்கோட்டை நகராட்சிக்கு பணி மாறுதல் வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 14.07.2017ம் தேதிய ந.க.எண். 17083/17–TPI கடிதத்தில் மேற்படியாரின் பணி மாறுதலுக்கு இந்நகராட்சியிலிருந்து தடையின்மை சான்று மற்றும் மன்றத்தின் அனுமதி பெற்று அறிக்கை சமர்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தனியாரின் உடல் நிலையினை கருத்தில்கொண்டு இந்நகராட்சியிலிருந்து புதுக்கோட்டை நகராட்சிக்கு பணியிட மாறுதலில் செல்வதற்கு தடையில்லாச் சான்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 15/2018/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 242** **நாள் 31.01.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 4

திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 04.01.2018ம் தேதிய நேரடி உத்தரவின்படி திருவாரூரில் 19.08.2017ம் தேதியன்று நடைபெற்ற புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவிற்காக தினசெய்தி நாளிதழில் 19.08.2017 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பர தொகை (தினசெய்தி பட்டியல் எண் 241/2017–18 நாள்19.08.2017) ரூ.20,000/–த்தை தினசெய்தி நாளிதழ்க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 54/2018/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 243** **நாள் 31.01.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 5**

இந்நகராட்சியில் எதிர்வரும் 12.02.2018 அன்று திறந்த வெளி கழிப்பிடமற்ற நகராட்சி என அறிவிக்க ஆய்வு செல்வதற்கு மத்திய அரசு மூலம் நியமிக்கப்பட்ட அலுவலர் வர இருப்பதால் இந்நகராட்சி பகுதியில் உள்ள 12 சமுதாய பொது கழிப்பிடங்களை சுத்தம் செய்ய வேண்டி இருப்பதால் 20 லிட்டர் பினாயில் மற்றும் 20 லிட்டர் ஆசிட் திருவாரூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 5,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1051/2015/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 244**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**நாள் 31.01.2018**

**பொருள் எண் 6**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கவும், டெங்கு தடுப்பு பணிகளுக்கும் குப்பை தொட்டிகள் உள்ள இடங்களில் போடவும், குப்பை எடுக்கப்படும் இடங்களில் தெளிக்கவும், ஊர் முக்கிய திருவிழாகள் மற்றும் மதசார்பு பண்டிகைகள் போன்ற பொது சுகாதார முக்கிய பணிகளுக்கும், மற்றும் இதரஅலுவலக பணிகளுக்கும் நீர்த்த சுண்ணாம்பு 5000 கிலோவும், பிளிச்சிங் பவுடர் 500 கிலோவும் தேவைப்படுகிறது. இருப்பில் மேற்படி பொருட்கள் இருப்பு இல்லாததால் மேற்படி பொருட்களை ஒப்பந்தபுள்ளி பெற்று செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 80,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 310/2018/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 245**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**நாள் 31.01.2018**

**பொருள் எண் 7**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள TN 50 X 2638 என்ற எண் உள்ள வாகனத்திற்கு பழுது நீக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 223 நாள் 30.11.2017ன்படி அனுமதிக்கப்பட்டு 30.02.2018 ஆம் தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | 80,000 | 79500 |
| 2 | கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | | 91000 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 3338/2017/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 246**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**நாள் 31.01.2018**

**ஓம் / திரு. சோ.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை**
**தனி அலுவலர் / ஆணையர்**
**கூத்தாநல்லூர் நகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையர்**
**கூத்தாநல்லூர் நகராட்சி**